**இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்த்தல் (மட்டுப்படுத்தப்பட்ட) – 2021(2023)**
**சேவை ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - 2025**

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III இற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கமைய, 2025.09.01ம் திகதி முதல் ஆட்சேர்க்கப்படும் 405 உத்தியோகத்தர்களுக்காக அச் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய மூன்று மாத சேவை ஆரம்ப பயிற்சிப் பாடநெறி 2025.09.02 ம் திகதி முதல் வதிவிட நிகழ்ச்சித்திட்டம் ஒன்றாக ஆரம்பிப்பதற்கு கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் மனித வள அபிவிருத்திக் கிளை நடவடிக்கையெடுத்துள்ளது.

அனைத்து நியமனதாரர்களும் இப் பயிற்சிப் பாடநெறியைப் பூர்த்தி செய்வது கட்டாயமாகும்.

2025.09.01ம் திகதியன்று கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சில் மு.ப 10.00 மணிக்கு ஆரம்பிக்கும் நியமனக் கடிதம் வழங்கும் வைபவம் நிறைவடைந்த பின்னர், அனைத்து நியமனதாரர்களும் பயிற்சிப் பாடநெறி நடைபெறும் பயிற்சி நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்படுவர். அன்றைய தினம் முதல் பயிற்சிப் பாடநெறி ஆரம்பிக்கும் என்பதால் அமைச்சிலிருந்து பயிற்சி நிலையத்திற்கு செல்வதற்காக நியமனதாரர்களுக்கு போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்ய்ப்படும்.

**பயிற்சி நிலையத்திற்கு கொண்டுவர வேண்டிய ஆவணங்கள்/ பொருட்கள்**

1. தேசிய அடையாள அட்டை
2. தனிப்பட்ட பயன்பாட்டிற்கு அவசியமானவை (மருந்துகள், மருத்துவ அறிக்கைகள், கட்டில் விரிப்புக்கள் மற்றும் தலையணை உறை, சுகாதார பொருட்கள் போன்றன உட்பட)
3. உடை
   - I. பெண் உத்தியோகத்தர்கள் சாரி அல்லது ஒசரி
   - II. ஆண் உத்தியோகத்தர்கள் – கழுத்துப் பட்டியுடன் நீளக் கை மேற்சட்டை மற்றும் நீளக் காற்சட்டை அல்லது தேசிய உடை